மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முன்பே கூறியதைப்போல ஒரு குறிப்பிட்ட தொகையை வைத்து அந்தந்த நூலகங்கள் இயங்க நூல்களை வாங்கிக்கொள்ளலாம். சென்ற ஆண்டிலிருந்து மத்திய நூலகம் 10 அல்லது 12 லட்சம் ரூபாய்க்கான நூல்களை வாங்கி கிளை நூலகங்களுக்கு அனுப்பி வைக்கின்ற ஒரு ஏற்பாடு இருந்து வருகிறது. வடார்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் புதிய நூலகங்கள் 10 தொடங்கப்பட வேண்டுமென்ற கருத்தினையும் அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நூலகங்களுக்கு எவ்வளவு நிதி ஒதுக்குவது என்பது இன்னமும் முடிவு செய்யப்படாமல் இருப்பதால் அந்தப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

பொறியியல் கல்லூரிகளில் இடங்கள்

* 28 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1975-76 ஆம் கல்வி ஆண்டில் பொறியியல் கல்லூரிகளில் இடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 1974-75-ல் இம்மாநிலத்திலுள்ள தொழில் நுட்பக் கல்லூரிகளில் இருந்து வந்த மொத்தம் 1,290 இடங்கள், 1975-76 ஆம் கல்வி ஆண்டு முதல் 1,390 இடங்களாக அதிகரிக்கப் பட்டுள்ளன.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த பொறியியல் கல்லூரியில் இடங்களை அதிகரிக்க மத்திய அரசின் அனுமதி பெற வேண்டியுள்ளதா ? பொறியியல் பட்டம் பெற்று, வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கையை அரசு அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மத்திய அரசின் அனுமதி தேவையில்லை. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் 1967-68 ஆம் ஆண்டில்

1975 அக்டோபர் 24]

1,225 இடங்கள் வைக்கப்பட்டிருந்தன. அப்போது இந்தியா முழுவதும் பொறியியல் பட்டம் பெற்ற ஏராளமானவர்கள் வேலையில்லாமல் இருந்ததால் எல்லா மாநிலங்களிலும் பொறியியல் கல்லூரிகளில் உள்ள இடங்களைக் குறைக்க வேண்டுமென்று 'ஆல் இந்தியா கவுன்சில் ஆஃப் டெக்னிக்கல் எஜுகேஷன்' மத்திய கல்வி அமைச்சர் தலைமையில் கூடி, சிபாரிசு செய்தது. எல்லா மாநிலங்களிலும் அந்த சிபாரிசை ஏற்றுக்கொண்டார்கள். அந்த வகையிலே தான் 1967-68 ஆம் ஆண்டில் நம்முடைய மாநிலத்தில் 1,225 என்று இருந்ததை 1,190 ஆக்க் குறைத்தோம். அவர்கள் இன்னும் குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் நாம் மேலும் குறைக்க விரும்பவில்லை. 1973 ஆம் ஆண்டு அதை 1,290 இடங்களாக உயர்த்தினோம். பின்னால் 1,390 இடங்களாக அதாவது 100 இடங்களை அதிகரித்திருக்கிறோம். இப்போது பயில்கின்றவர்கள் பட்டம் பெற்று வெளியே வர ஐந்தாண்டுகள் ஆகும். இந்த ஐந்தாண்டுகளில் வருடத்திற்கு 100 இடங்களாகப் பார்த்தால் 500 இடங்கள் அதிகமாகும். நாட்டினுடைய தேவையை எண்ணித்தான் பெருக்க வேண்டியிருக்கிறதே தவிர, மத்திய அரசின் அனுமதி தேவையில்லை. 1,500 இடங்களாகக்கூட அதிகரிக்கலாம். இருந்தாலும் அதற்குக் கல்லூரியிலே இடவசதி, பிற வசதிகள் எல்லாம் இருக்கவேண்டும்.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, பொறியியல் கல்லூரியிலே தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு எத்தனை இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு 18 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு விண்ணப்பித்த அத்தனை மாணவர்களையும் சேர்த்திருக்கிறார்கள். 120 மார்க் இருந்தால்தான் சேர்த்துக்கொள்வது என்று முடிவு செய்திருந்தாலும் தாழ்த்தப்பட்ட மாணவர்களைப் பொறுத்தவரையில் விண்ணப்பித்த அத்தனை மாணவர்களையும் சேர்த்துக்கொண்ட பின்பும் 13 சதவிகிதம் தான் வந்திருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, பொறியியலிலே 'எலெக்ட்ரானிக்', 'ஏரோனாட்டிக்ஸ்' போன்ற புதிய பிரிவுகளுக்குத் தேவை அதிகமாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பிரிவுகளிலுள்ள இடங்களை அதிகரிக்க அரசு முயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல 'எலெக்ட்ரானிக்', 'ஏரோனுட்டிக்ஸ்' போன்ற பிரிவுகளில் தேவை அதிகம் இருப்பதால் அந்தப் பிரிவுகளைக் கடந்த 2, 3 ஆண்டுகளில் ஓரளவு விரிவுபடுத்தியிருக்கிறோம். சென்னை, கிண்டி இஞ்சினீயரிங் கல்லூரியில் இந்தப் பிரிவுகளிலுள்ள இடங்களைப் படிப்படியாக உயர்த்தியிருக்கிறோம். மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜியில் ஏரோனுட்டிக்ஸுக்குப் போதுமான இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே ஐ.ஐ.டி. யிலும் ஏரோனுட்டிக்ஸுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

Madhavaram Leprosy Home

*29 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) whether it is a fact that an isolation ward in the Madhavaram Leprosy Home has been donated by a private organisation; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) மாதவரம் தொழுநோய் இல்லத்திற்கு 22—12—1974 அன்று வட சென்னை அரிமா சங்கத்தால் (Lions Club) நோயாளிகளைத் தனியே பிரித்து வைக்கும் தனி வார்டு ஒன்று நன்கொடையாக கட்டி அளிக்கப்பட்டது. அரசு மானியம் ஏதும் இல்லாமல், அது தனியார் தொண்டு நிறுவனமாக நடத்தப்பட்டு வருகிறது.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, மாவட்டங்களிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக நன்கொடைகள் வசூலித்து இம்மாதிரி முக்கியமான வியாதியஸ்தர்களுக்குத் தனி வார்டுகள் ஏற்படுத்தச் சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா? அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, முக்கியமாகத் தடுக்கப்பட வேண்டிய நோய்களில் இந்தக் காசநோய் ஒன்று. அதற்காகக் காசநோய் வில்லைகள் ஆண்டுதோறும் காந்தியடிகள் பிறந்த நாளிலிருந்து கிட்டத்தட்ட 30 நாட்களுக்கு